Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிற்பங்களில் பெண்ணியம்

செல்வி சு. முருகலட்சுமி & திரு. வீ. கோபிநாத்
உளவியல் துறை உதவிப் பேராசிரியர்
பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை
20bpy039@psgrkcw.ac.in , gobinath@psgrkcw.ac.in

11

**ஆய்வுச் சுருக்கம்:**

சிற்பக்கலை என்பது மனிதனின் கலாச்சாரத்தையும் அவனது வாழ்க்கை முறையையும் வெளிப்படுத்தும் ஒரு கருவியாக செயல்பட்டது. சிற்பக் கலையில் பெண்ணியங்களை பற்றி பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இந்த ஆய்வு கட்டுரையில் பெண்ணியத்தைப் பற்றியும் பெண்களின் ஆளுமை தன்மையும் பறைசாற்றும் சிற்பங்களை பற்றியும் ஆராாய்வதே இந்த ஆய்வு கட்டுரை.

**ஆய்வுநோக்கம் :**

அக்கா மகாதேவி சிற்பம் புலப்படுத்தும் வீரத்தையும், உலகம்மை சிற்பம் வெளிப்படுத்தும் ஆளுமை தன்மையையும் உணர்த்துவதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**கடவுச்சொற்கள் :**

1. அக்கா மகாதேவி சிற்பம் – பெண்ணியம் – ஈஷா யோக மையம் - கோவை
2. உலகம்மை சிற்பம் – ஆளுமை – தென்காசி

**முன்னுரை :**

**நிமிர்ந்த நன்னடை நேற்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திரும்புவதில்லையாம்**

- **புதுமைப்பெண் பாடல் (7)**

சிற்பக்கலை என்பது பழங்காலம் தொட்டு மனிதர்களால் வளர்க்கப்பட்டதாகும். பழங்காலத்தில் சிற்பங்களை மண் மரம் போன்றவற்றில் செய்தனர் பின் கற்களில் பாறைகளில் சிற்பங்களை செதுக்கினார். சிற்பங்களில் இருவகை உண்டு. முழு உரு சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள். சிற்பக்கலை மனிதனின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் ஒரு கருவியாக செயல்பட்டது.

சங்க காலங்களில் பெண்களைப் பற்றிய பல உயரிய கருத்துக்களான அன்பு,தாய்மை என பலவற்றைச் சிற்பங்களாக செதுக்கியுள்ளனர். அவற்றில் வீரம்,ஆளுமை தன்மை போன்றவற்றை பற்றி

எடுத்துரைப்பதே இந்த ஆய்வு கட்டுரை.

**ஈஷா யோக மையம் :**

ஈஷா யோகா மையம் கோயம்புத்தூர் நகரத்தில் உள்ள வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த கோவில் சத்குருவால் உருவாக்கப்பட்டது. தியான லிங்கம் தான் ஈசா யோகா மையத்தின் சிறப்பாகத் திகழ்கிறது . இந்த தியான மையம் 2,50,000 செங்கற்களால் ஆனது என்பது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இந்த ஈஷா மையத்தில் பெண்களைப் பற்றியும், அவர்களின் வீரத்தைப் பற்றியும் வெளிப்படுத்தும் விதமாக அக்கா மகாதேவியின் சிற்பத்தை வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றிக் கீழே காண்போம்.

**அக்கா மகாதேவியின் பிறப்பு :**



கர்நாடக மாநிலத்தின் ஷிமோகா மாவட்டத்தில் விடுதாடி என்ற கிராமத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிர்மல் செட்டி, சுமதி செட்டி என்போருக்கு மகளாக பிறந்தவர் மகாதேவி. இவரது திருநாமமும் மகாதேவி தான். அவரது குடும்பத்தினர் அனைவருமே சிவபக்தியாளர்கள். இவர் அருமையானப் பாட்டு எழுதும் திறனும், இனிமையாகப் பாடும் குரல் வளத்தையும் பெற்றிருந்தார்.

**மகாதேவியின் திருமண வாழ்க்கை:**


மகாதேவியின் புகழ் பரவ, அந்தப் பகுதியில் சமண சமயத்து அரசன் கவுசிகன் மாறுவேடத்தில் வந்து மகாதேவியின் பாடலை ரசித்தார். மகாதேவியின் அழகில் மயங்கிய அவர் அவரையே திருமணம் செய்ய நினைத்து மகாதேவியின் பெற்றோரிடம் கேட்டார். சமண சமயத்து அரசனை மணந்தால் சிவவழிபாட்டுக்கு தடைவரும் என்று எண்ணி மறுத்தார் மகாதேவி. ஆனால் அரசன் பெற்றோர்களை கொன்று விடுவேன் என்று கூறியதால் திருமணத்திற்கு ஒரு நிபந்தனையோடு சம்மதித்தார். "என் பூஜைக்கு எந்தத் தடையும் விதிக்கக் கூடாது. நான் செய்யும் எந்தக் காரியத்தையும் ஏன் என்று கேட்கக் கூடாது. அப்படிக் குறுக்கிட்டால், மூன்று முறை பொறுப்பேன். அதன் பிறகு, என் சொந்த வழியில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சென்றுவிடுவேன் " என்று நிபந்தனை விதித்தே அரசனை மணந்தார் மகாதேவி . அரசனும் அதற்கு சம்மதித்து அவர்கள் திருமணம் நடை பெற்றது.

ஒருமுறை மகாதேவி சதாசிவ பூஜையில் இருக்கும் பொழுது விருந்தினர் வந்திருக்கிறார்கள் என்று அரசர் கூறியதால் அந்த பூஜை தடைபட்டது. இரண்டாவது முறை அரசர் நகர் உலாவிற்கு மகாதேவியை அழைத்ததால் பூஜை தடைபட்டது. மூன்றாவது முறை குடும்ப விழா என்று கூறியதால் மகாதேவியின் சிவபூஜை நின்றது. நான்காவது முறை தேவி சிவ பூஜையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது அரசர் தேவியிடம் தன்னோடு தனித்திருக்க வருமாறு கேட்டார். அப்பொழுது வரமறுத்த தேவியால் அரசர் கோபமடைந்தார், தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தும் விதமாக அக்கா மகா தேவியின் ஆடையை துயில் உரிய முற்பட்டார். ஆனால் அக்கா மகாதேவி அரசர் துயிலுரியும்போது கூட அவர் அமைதியான நிலையே வெளிப்படுத்தினார். அந்த நேரத்தில் அவர் சிவனையே வேண்டி அவரை பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவரது முடியே அவருக்கு ஒரு ஆடையாக மாறியது என்கிறது வரலாறு.

**அக்கா மகாதேவி புலப்படுத்தும் பெண்ணியம்:**



**நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும்**
**நற்குடி பெண்களின் குணங்களாம்.**

- **புதுமைப்பெண் பாடல் (4)**

மேற்கண்ட நிகழ்வையும், பாரதியின் வரியையும் உற்று நோக்கினால் பெண்ணியத்தின் சாராம்சம் தெரிய வரும். இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே போகிறது. பெண்களின் குரலும் எதிர்ப்பும் அதைவிட அதிகரித்துக் கொண்டே போகிறது . துன்பப்பட்ட பெண்ணின் குரல் வெளிவராமல் இருக்க பெண்ணிணம் சார்ந்த பெண்களின் குரல் தான் வலுவாக இருக்கிறது. அப்படி அந்த பெண்களுக்கு அக்கா மகாதேவி கற்றுக் கொடுக்கும் பாடம் தான்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இன்றைய பெண்கள் நாம் பெண்ணியம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உருவாக்குகிறது.

அக்கா மகா தேவியின் பெண்ணியம் என்னவென்றால் அவர் துயிலுறியும் பொழுது கூட தன் முழு கவனத்தையும் கடவுள் மேல் வைத்திருந்தால் தன்னுடைய உடம்பு தனக்கு உரியது அல்ல என்றும் அதை சார்ந்தது எதுவும் தன்னுடையது இல்லை என்னும் நிலையை அவர் அடைந்திருந்தார். அந்த நிலையில் தன்னை யார் அவமானப்படுத்தினாலும் அது தன்னை வந்து சேராது . அது அவர்களுக்கு திரும்ப சேரும் என்றும் கூறுகிறார். அதுபோல்தான் இன்றைய பெண்களும் தங்களுக்கு ஏற்படும் அவமானங்கள் தங்களால் ஏற்பட்டது என்று எண்ணாமல் தங்கள் அனுமதி இன்றி தங்களை இழிவாக பேசியவர்களும் இழிவாக நடத்தியவர்களும் தான் அதற்கு காரணம் என்று நினைக்க வேண்டும் . தங்கள் அனுமதியின்றி எப்பொழுது ஒருவர் நம்மை இழிவாக நடத்துகிறார்களோ, பேசுகிறார்களோ அது அப்படி செய்தவர்களின் இழிவான குணங்களை அடையாளம் காட்டுகிறதே தவிர அதனால் நமக்கு எந்த ஒரு தீங்கும் என்றும் நடைபெறாது என்பதை தான் அக்கா மகாதேவி தங்களின் நிலைப்பாட்டில் இருந்து கூறுகிறார்.

**<u>கீழப்பள்ளியூர் கோவில்</u> :**

தென்காசி மாவட்டத்திலுள்ள கீழப்பள்ளியூர் என்னும் ஊரில் இக்கோவில் அமைந்துள்ளது இந்த கோவில் கட்டப்பட்ட ஆண்டு மூன்றாம் நூற்றாண்டு. இது ஒரு குடைவரை சிற்பமாகும் . இதில் அமைந்துள்ள கடவுள் உலகநாதனும் உலக அம்மையுமாகும். தென்காசி மாவட்டத்திலுள்ள காசி விஸ்வநாதர் கோவிலும் கீழப்பள்ளியூர் ஊரில் உள்ள உலகநாதன் உலகம்மை என்னும் இக்கோவிலில் உள்ள குடைவரை சிற்பமும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளது.

**<u>உலகம்மை புலப்படுத்தும் ஆளுமை</u>:**



இங்கு உலகநாதன் என்னும் சிவனின் சிற்பம் சாந்த நிலையிலும் உலக அம்மையின் சிற்பம் ஆளுமை தன்மையும் கம்பீரத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் செதுக்கப்பட்டுள்ளது. இங்கு

உலகநாதனின் தலையில் பாம்பு மட்டுமே இருப்பதால் இது கங்கையை திருமணம் செய்வதற்கு முன்னர் செதுக்கப்பட்ட சிற்பமாக கருதப்படுகின்றது. ஆளுமை தன்மையில் வீற்றிருக்கும் உலகம்மையின் ஒரு கையில் தாமரையும் மறுக்கையில் விளக்கும் உள்ளதும். இங்கு தாமரை செல்வ செழிப்பையும் விளக்கும் மங்கலத்தையும் குறிக்கிறது.

**முடிவுரை:**

நிறைவாக சிற்ப கலையின் அம்சத்தை அறிந்து கொண்டோம். அந்த சிற்பங்களில் பெண்ணியம் என்னும் கோட்பாட்டையும் தெரிந்து கொண்டோம். இதை அறிந்து இன்றைய காலத்தில் பெண்ணியத்தை எப்படி பார்க்க வேண்டும் என்பதை இந்த ஆய்வு மூலம் நாம் புரிந்துகொள்வதற்கான சிறிய சான்று தான் இந்த ஆய்வு கட்டுரை.

**மேற்கோள்கள் :**

1. **நிமிர்ந்த நன்னடை நேற்கொண்ட பார்வையும்**
   **நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
   **திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
   **செம்மை மாதர் திரும்புவதில்லையாம்**
2. **நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்**
   **ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும்**
   **நற்குடி பெண்களின் குணங்களாம்.**

**துணைநூற்பட்டியல் :**

1. புதுமைப் பெண் - **பாரதியார் பாடல் (7)**
2. கண்ணனுக்கு மீரா சிவனுக்கு அக்கா மகாதேவி 2017 ஹரி காமராஜ்.
3. பாரதியார் - புதுமைப் பெண் பாடல் (4).
4. .தென்காசி உலக அம்மன் சமேத காசி விஸ்வநாதர் **ஆலயம் பற்றி** அறிவோம் (2020).
5. பக்தி வழியில் ஒரு புரட்சி பெண் அக்கா மகாதேவி ஜூன் 21 (2016).
6. பக்தியின் இலக்கணம் அக்கா மகாதேவி ஏப்ரல் 24 (2016).
7. பெண்ணியத்தின் ஒரு உருவகம் அக்கா மகாதேவி Raggi mudde செப்டம்பர் 23 (2011).
8. தென்காசி பேசப்படாத அளவு சாகா வரம் wordpress.com ஜூலை 2 (2016).
9. கவிஞர் மற்றும் புனிதர் அக்கா மகாதேவி நினைவு கூறுதல் இந்திய பெண்கள் வரலாற்றில் செப்டம்பர் 14 (2017).
10. மெய்வழி பயணத்தில் பெண்ணுடன் அக்கா மகாதேவி ஆகஸ்ட் 4 (2014).
11. நிகழ்ந்ததும் நிகழாததும் 21 டிசம்பர் (2013).
12. Akkamahadevi November 21 (2022).